கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், குளித்தலை

அசல் வழக்கு **90/2025**

வாதி தரப்பு சாட்சி –1 ஜெயக்குமார் என்பவரை திரு.ம.பெரியசாமி, இளநிலை உதவியாளர், அவர்களால் 44/1969 வது பிரிவின் கீழ் பிரமாணம் செய்யப்பட்டு 08.04.2026ம் தேதியில் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

<u>1,2 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>

1. என்னுடன் பிறந்தவர்கள் பிச்சைமுத்து, தங்கவேல், ஆரீயராஜன், நாகராஜன், பட்டு ஆகியோர்கள் என்றால் சரிதான். எனது தந்தை பெயர் மாரியப்பபிள்ளை என்றால் சரிதான். எனது தந்தையின் தம்பி நடராஜன்பிள்ளை என்றால் சரிதான். எனது தந்தையின் தந்தை பெயர் செல்லாண்டிபிள்ளை என்றால் சரிதான். மேற்படி செல்லாண்டிபிள்ளையும், முத்தியபிள்ளையும் பிச்சைமருதபிள்ளையின் மகன்கள் என்றால் சரிதான். பிச்சைமுத்து எனது அண்ணன் ஆவார். பிச்சைமுத்துவிற்கு கஜலெட்சுமி, விஜயலட்சுமி ஆகிய இரு மகள்கள் என்றால் சரிதான். தங்கவேல் எனது அண்ணன் ஆவார்.

2. அவருக்கு அண்ணகாமு என்கிற சரளாவும், பிரியாவும் இரு மகள்கள் என்றால் சரிதான். அண்ணகாமு என்கிற சரளாவின் கணவர் பெயர் தங்கவேல் என்றால் சரிதான். பிரியாவின் கணவர் என்றால் சிவசுப்பிரமணியம் என்றால் சரிதான். நாகராஜ் எனது அண்ணன் ஆவார். அவரது மனைவி பெயர் பிரேமா ஆவார். நாகராஜ் மற்றும் பிரேமாவிற்கு செந்தில், சிவமாரியப்பன், சுமதி ஆகிய மூன்று வாரிசுகள் என்றால் சரிதான். சுமதியின் கணவர் பெயர் சோமசுந்தரம் ஆகும். வெங்கடேசன், கீதா, சரண்டா ஆகியோர் எனது பிள்ளைகள் ஆவார்.

3. கீதாவின் கணவர் பெயர் தியாகராஜன், சரண்யாவின் கணவர் பெயர் கிருபாகரன். எனது பாட்டனார் செல்லாண்டிபிள்ளையின் தம்பி முத்தியப்பிள்ளை என்பவருக்கு பிச்சைமருதபிள்ளை மற்றும் இவ்வழக்கின் 1,2 பிரதிவாதிகள் வாரிசுகள் என்றால் சரிதான். 3 முதல் 6 பிரதிவாதிகள் 1,2 பிரதிவாதிகள் சகோதரர் பிச்சைமருதபிள்ளையின் வாரிசுகள் என்றால் சரிதான். தோகைமலை கிராமத்தில் உள்ள சர்வே எண்.440/8 மற்றும் பிற சொத்துகள் சேர்ந்து எனது பாட்டனார்

செல்லாண்டிப்பிள்ளைக்கும் மற்றும் எனது சின்ன பாட்டனார் முத்தியபிள்ளைக்கும் பாத்தியப்பட்டது என்றால் சரிதான்.

4. மேற்படி இருவரும் சேர்ந்து 26.03.1959 ல் பாகப்பிரிவினை செய்து கொண்டனர் என்றால் சரிதான். மேற்படி பாகப்பிரிவினையில் செல்லாண்டிபிள்ளை மற்றும் முத்தியப்பிள்ளைக்கு சொத்துக்கள் தனித்தனியாக கிடைத்தது என்றால் சரிதான். சர்வே எண்.440/8 ற்கு கீழ்புறம் தென்வடல் வீதீ உள்ளது என்றால் சரிதான். மேற்படி தென்வடல் வீதியை ஒட்டி மேற்கே கிழமேல் 55 அடி தென்வடல் 35 அடி செல்லாண்டிபிள்ளைக்கு பாகப்பிரிவினையின் மூலம் பிரிந்ததா என்றால் பிரிந்தது.

5. அதை ஒட்டி மேற்கே உள்ள சொத்துக்கள் முத்தியாபிள்ளைக்கு பிரிந்ததா என்றால் பிரிந்தது. மேற்படி தென்வடல் வீதிக்கு மேல்கோடியில் சத்திரமானியம் என்ற நிலம் உள்ளது என்றால் சரிதான். இதற்கிடைப்பட்ட சொத்துக்கள் தான் செல்லாண்டிப்பிள்ளை மற்றும் முத்தியப்பிள்ளைக்கு பாத்தியப்பட்ட சொத்த்துக்கள் என்றால் சரிதான். மேல்கோடியில் சத்திரமானியத்தை ஒட்டி கிழக்கே உள்ள நிலம் கிழமேல் 54 அடியும், தென்வடல் 105 அடியும் செல்லாண்டிபிள்ளைக்கு கிடைக்கப்பெற்றது என்றால் சரிதான்.

6. மேற்படி தென்வடல் வீதியை ஒட்டி மேல்புறம் உள்ள கிழமேல் 55 அடிக்கு மேல்புறமும், மேல்கோடியில் சத்திரமானியத்திற்கு பாத்தியப்பட்ட சொத்திற்கு கீழ்புறம் உள்ள கிழமேல் 54 அடிக்கு கீழ்புறம் உள்ள சொத்து முத்தியாப்பிள்ளைக்கு பிரிந்தது என்றால் சரிதான். முத்தியாப்பிள்ளைக்கு பிரிந்த சொத்தில் வீடு உள்ளது என்றால் சரிதான். மேற்படி வீடு வடக்கு பார்த்த வீடு என்றால் சரிதான். மேற்படி வீட்டிற்கு கதவு எண் உள்ளதா என்றால் உள்ளது. கதவு எண் தெரியாது. முத்தியாபிள்ளைக்கு பிரிந்த சொத்துக்களை அவரின் வகையறாவில் உள்ளவர்கள் அனுபவம் செய்கிறார்களா சரியல்ல.

7. எனது அனுபவத்தில் தான் உள்ளது. மேற்படி சொத்தை விற்பனை செய்யக்கூடாது என்று தான் இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளேன்

என்றால் சரிதான். முத்தியாபிள்ளை வகைறயாவிடமிருந்து மேற்படி சொத்திற்கு கிரைய ஒப்பந்தம் செய்து கொண்டேனா என்றால் இல்லை. முத்தியாப்பிள்ளைக்கு பாகப்பிரிவினையில் ஒதுக்கப்பட்ட சொத்தை தான் தாவா சொத்தாக காண்பித்துள்ளேனா என்றால் காண்பித்துள்ளேன். எனது பாட்டா செல்லாண்டிபிள்ளைக்கு பிரிந்த சொத்துக்களை பிரிந்த சொத்துக்களை பொறுத்து நானும் எனது சகோதரர்களும் கடந்த 25.03.1966 ல் பாகப்பிரிவினை செய்து கொண்டோமா என்றால் செய்து கொண்டோம்.

8. மேற்படி பாகப்பிரிவினையில் வீதிக்கு மேற்கே உள்ள கீழமேல் 55 அடி தென்வடல்35 அடி எனது பாட்டா செல்லாண்டிப்பிள்ளைக்கு பிரிந்த சொத்துக்களை தான் பிரித்து கொண்டோமா என்றால் பிரித்து கொண்டோம். மேற்படி சொத்திற்கு மேல்புறம் முத்தியாபிள்ளைக்கு பாகப்பிரிவினையில் கிடைக்கபெற்றதா என்றால் கிடைக்கப்பெற்றது. முத்தியப்பிள்ளைக்கு அவர் பாகப்பிரிவினையில் கிடைத்த சொத்துக்களை அவர் அனுபவம் செய்யவில்லை. முத்தியாப்பிள்ளைக்கு பாகப்பிரிவினையில் கிடைத்த சொத்துக்களை முத்தியபிள்ளையிடமிருந்தோ, அவரது வாரிசுகளிடமிருந்தோ நனோ, எனது தகப்பனாரோ, எனது பாட்டனாரோ, எனது உடன் பிறந்தவர்களோ கிரையம் பெறவில்லை என்றால் சரிதான்.

9. முத்தியாபிள்ளைக்கு பாகப்பிரிவினையின் மூலம் பிரிந்த சொத்துக்களை நான் அனுபவம் செய்வதால் எனக்கு உரிமையானது என்று பரிகாரம் கோருகிறேன். எனக்கு அனுபவம் பாத்தியம் ஏற்பட்டுள்ளதால் தாவா சொத்துகள் எனக்கு பாத்தியப்பட்டது என்று தாவா பரிகாரம் கோரியுள்ளேன். பிரதிவாதிகளுக்கு சொத்தில் உரிமை இல்லை என்று இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளேனா என்றால் ஆமாம். பிரதிவாதிகளுக்கு தாவா சொத்தில் பாத்தியம் உள்ளதா என்றால் உள்ளது. எனக்கும் அனுபவ பாத்திய உரிமை உள்ளது.

10. பிரதிவாதிகளுக்கு தாவா சொத்தை கிரையம் செய்யும் உரிமை உள்ளதா என்றால் உள்ளது. எனக்கு தாவா சொத்தை கிரையம் செய்ய உரிமை உள்ளதா என்றால் இல்லை. பிரதிவாதிகள் மட்டுமே தாவா

சொத்தின் உரிமைகள் என்றால் சரிதான். 25.03.1966 ல் ஏற்பட்ட பாகப்பிரிவினையில் கண்ட சொத்துக்களுக்கும் தாவா சொத்துக்களுக்கும் சம்மந்தம் உள்ளதா என்றால் இல்லை. ஆரியராஜனுக்கு பாத்தியப்பட்ட 1/5 பங்கு சொத்தினை ரபீக் என்பவருக்கு விற்பனை செய்துள்ளாரா என்றால் விற்பனை செய்துள்ளார். மேற்படி ரபீக் என்பரை எனக்கு தெரியுமா என்றால் தெரியும்.

11. என்னிடம் காட்டப்படும் ஆவணமானது ஆரியராஜன் ரபீக் என்பவருக்கு விற்பனை செய்த கிரைய ஆவணத்தின் சான்றிட்ட நகல் என்றால் சரிதான். **மேற்படி 20.07.2022 ம் தேதியிட்ட பதிவு செய்யப்பட்ட கிரைய ஆவணத்தின் சான்றிட்ட நகல் பி.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** எனது பிச்சைமுத்துவின் வாரிசுகளும் பிச்சைமுத்துவிற்கு பாத்தியப்பட்ட சொத்துக்களை மேற்படி ரபீக் என்பவருக்கு விற்பனை செய்துள்ளார்கள் என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் ஆவணமானது மேற்படி பிச்சைமுத்து ரபீக் என்பவருக்கு விற்பனை செய்த கிரைய ஆவணத்தின் சான்றிட்ட நகல் என்றால் சரிதான்.

**12. மேற்படி 20.07.2022 ம் தேதியிட்ட பதிவு செய்யப்பட்ட கிரைய ஆவணத்தின் சான்றிட்ட நகல் பி.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** எனது அண்ணன் தங்கவேலுவின் வாரிசுகள் தங்கவேலுவின் பங்கு மேற்படி ரபீக் என்பவருக்கு விற்பனை செய்துள்ளார்கள் என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் ஆவணமானது மேற்படி தங்கவேலுவின் வாரிசுகள் ரபீக் என்பவருக்கு விற்பனை செய்த கிரைய ஆவணத்தின் சான்றிட்ட நகல் என்றால் சரிதான். **மேற்படி 23.07.2022 ம் தேதியிட்ட பதிவு செய்யப்பட்ட கிரைய ஆவணத்தின் சான்றிட்ட நகல் பி.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

**13.** நானும், எனது மகள்களும் சேர்ந்து ரபீக் என்பவருக்கு 23.07.2022 ம் தேதி எனக்கு பாத்தியப்பட்ட சொத்தை கிரையம் செய்து கொடுத்தேன் என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் ஆவணமானது நானும், எனது மகள்களும் சேர்ந்து ரபீக் என்பவருக்கு விற்பனை செய்த கிரைய ஆவணத்தின் சான்றிட்ட நகல் என்றால் சரிதான். **மேற்படி 23.07.2022 ம்**

**தேதியிட்ட பதிவு செய்யப்பட்ட கிரைய ஆவணத்தின் சான்றிட்ட நகல் பி.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

**14.** எனது அண்ணன் நாகராஜனின் வாரிசுகள் அவருக்கு பாத்தியப்பட்ட சொத்துக்களை ரபீக் என்பவருக்கு கிரையம் செய்து கொடுத்தார்கள் என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் ஆவணமானது நாகராஜனின் வாரிசுகள் ரபீக் என்பவருக்கு விற்பனை செய்த கிரைய ஆவணத்தின் சான்றிட்ட நகல் என்றால் சரிதான். **மேற்படி 23.07.2022ம் தேதியிட்ட பதிவு செய்யப்பட்ட கிரைய ஆவணத்தின் சான்றிட்ட நகல் பி.சா.ஆ.5 ஆக குறியீடு** செய்யப்படுகிறது.

15. சர்வே எண்.440/8ல் கட்டுப்பட்டிருந்த எங்களது சொத்துக்கள் அனைத்தையும் தற்போது ரபீக் என்பவருக்கு பாத்தியப்படுத்திவிட்டோம் என்றால் சரிதான். சர்வே எண்.440/8யை பொறுத்து பத்திரத்தின் அடிப்படையில் எந்தவித பாத்தியமும் எனக்கோ, எனது உடன்பிறந்தவர்களுக்கோ இல்லை என்றால் சரிதான். ரபீக் என்பவருக்கு விற்பனை செய்த சொத்துக்களில் பி.சா.ஆ.1 முதல் பி.சா.ஆ.5 வரையான ஆவணங்களில் கிழமேல் 35 அடி தென்வடல் 55அடி என்று காண்பித்துள்ள சொத்திற்கு மேல்புறமாக முத்தியப்பிள்ளையின் வகையறாவிற்கு பாத்தியப்பட்ட சொத்து என்று காண்பிக்கப்பட்டுள்ளதா என்றால் ஆமாம்.

16. முத்தியப்பிள்ளையின் வகையறா தான் இவ்வழக்கின் பிரதிவாதிகள் என்றால் சரிதான். கிழமேல் 35 அடி தென்வடல் 55அடி அளவுள்ள சொத்திற்கு கிழக்கே தென்வடல் வீதீ என்று குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் ஆமாம். கிழமேல் 35 அடி தென்வடல் 55அடி நிலத்திற்கு மேற்கே உள்ள சொத்து தான் முத்தியாப்பிள்ளைக்கு பாகப்பிரிவினையின் படி கிடைத்த சொத்துக்கள் என்றால் சரிதான். மேற்படி சொத்தில் தான் தாவா வீடு உள்ளது என்றால் சரிதான்.

**1,2 பிரதிவாதிகள் தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கு இணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சி ஒத்திவைக்கப்படுகிறது.**

Taken down by me in the open court read over interpreted to the witness and acknowledged by him /her to be correct.

Sd/-A.Yughathymariya
**Additional District Munsif,**
**Kulithalai.**